# கிளிநொச்சியில் புக்காரா தாக்கு; ஐவர் படுகாயம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 22 இதழ் 294
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 7-12-1993

## பரீட்சை குழம்பியது

(கிளிநொச்சி)
கிளிநொச்சிப் பகுதியில் நேற்றுக் காலை இரண்டு புக்காரா விமானங்கள் மூன்று தடவைகள் தாக்குதல் நடத்தின. இத்தாக்குதலில் ஒரு சிறுவன், அவரது தாயார் உட்பட ஐவர் படுகாயம் அடைந்தனர். வீடு ஒன்று முற்றாகத் தரைமட்டமானது. கால்நடைகள் இறந்துவிட்டதோடு பலன்தரும் மரங்கள் பலவும் முறிந்து வீழ்ந்தன.
நேற்றுக் காலை கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் பகுதி
(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகர், குண்டுவீச்சு பற்றி கொழும்புக்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ் நகர் கரையோரப் பகுதிகளான குருநகர், பாசையூர் பகுதிக்கள் மீது நேற்று முன்தினம் காலை மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல் குறித்து கொழும்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
இச்சம்பவம் குறித்து யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க
(4-ம் பக்கம் பார்க்க)

# ★ புலிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சி —
# யுத்த விமானங்களை பாதுகாக்க முடியாத நிலையில் அரசு திணறல்

(கொழும்பு)
விடுதலைப்புலிகளின் தாக்குகலுக்கு அஞ்சி தன்வசமுள்ள யுத்த விமானங்களைப் பாதுகாக்க முடியாத நிலையில் அரசு திணறி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இலங்கை விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்களை நிறுத்தி வைத்தால், தமது சர்வதேச விமான சேவைககளை நிறுத்திவிடப்போவதாக சர்வதேச விமான அமைப்புகள் இலங்கை அரசை எச்சரிக்கை செய்துள்ளதை அடுத்தே அரசுக்கு இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையை அடுத்து சீனன்குடா விமான நிலையத்தில் யுத்த விமானங்கள் அனைத்தும், பலாலி விமான நிலையத்தையும் திருகோணமலை திலும் நிறுத்தி வைக்கும்படி விமானப்படைத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.
இதேவேளையில், பூநகரி மோதலில் இராணுவத்திட
(4ம் பக்கம் பார்க்க)

## மல்கலைக்கழக அனுமதி: முறையீடுகளைச் சமர்ப்பிக்க குழு நியமனம்

(கொழும்பு)
1992/93 கல்வியாண்டிற்கான பல்வேறு கற்கை நெறிகளுக்கான மாணவர் தெரிவு பூர்த்தி செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி பல்கலைக்கழக அனுமதிக்கான மாணவர் தெரிவு தொடர்பான முறையீடுகளை சமர்ப்பிக்க வழமைபோல குழுவொன்று நியமிக்கப்பட்டுள்
(4ம் பக்கம் பார்க்க)

## திருமலைப் பகுதியில் 3 மீனவரைக் காணவில்லை

(திருமலை)
திருகோணமலைப் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்கள் காணாமல் போய்விட்டதாக தெரிவிக்கப்பட்டது.
கடந்த வியாழக்கிழமை
(4-ம் பக்கம் பார்க்க)

## பூநகரி 'அழிவுக்கு — பழிவாங்கும் நோக்கமாகவே யாழ்குடாவில்விமானத்தாக்கு - பி. பி. ஸி.

(கொழும்பு)
பூநகரி இராணுவ முகாம் மீது நடந்த மாதம் விடுதலைப்புலிகள் தாக்கி அழிக்கப்பட்டு பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும் கடற்படையினரும் கொல்லப்பட்டதற்கு பதிலடியாகவே விமானப் படையினர் யாழ். குடாமீது விமானத்தாக்குதலை அதிகரித்துள்ளனர் என பி.பி.ஸி.யின் கொழும்பு செய்தியாளர்
(4-ம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்குதல் பற்றி வத்திக்கானுக்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்.குடாநாட்டில் கத்தோலிக்கத் தேவாலயங்கள் மீதும் அப்பாவிப் பொதுமக்கள் மீதும் இலங்கை அரசு திட்டமிட்டு நடாத்திவரும் விமானக்குண்டு வீச்சு தாக்குதல்கள் பற்றி வத்திக்கான் தலைமைப் பீடத்துக்கு நேரடியாகவே தெரியப்படுத்தப் போவதாக சந்தேகம் மறைமாவட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.
கத்தோலிக்க தேவாலயங்
(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாவில் மலேரியா அபாயம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.குடா பகுதியில் அண்மையில் பெய்த பெருமழையை அடுத்து மலேரியா நோய் வேகமாக பரவி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
மழையினால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் நுளம்புகள் பெருகி இந்நோய் ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஈ)

## அரச ஊழியர், மாணவர் கப்பலில் வர ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
கொழும்பில் தங்கியிருக்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் 200 பேரையும் விடுமுறையிலுள்ள அரசாங்க ஊழியர்களையும் திருகோணமலையிலிருந்து பருத்தித்துறைக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார்.

குமாரி கப்பல் மூலம் இவர்கள் இங்குவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மாகோ என்ற கப்பல் மூலமாகவும் மேலும் சில பயணிகள் பருத்தித்துறை வந்தடைவார்கள். இவ்விரண்டு கப்பல்களும் இன்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை நோக்கி புறப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. (158-இ)

## கிளாலி— பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி — பூநகரி படகுச் சேவை வழமை போல் இன்றும் நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அறிவித்துள்ளது. (ஈ)

## உள்நாட்டு யுத்தங்களால் 3 கோடி மக்கள் அகதிகள்

### உலக உணவு ஸ்தாபனம் அறிக்கை

(லண்டன்)
உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தங்களினால், 3 கோடியே 40 லட்சம் மக்கள் அகதிகளானதினால் உலகில் தற்போது பட்டினிச் சாவுகள் அதிகரித்து வருவதாக உலக உணவு ஸ்தாபனம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்படுவது.
அரசியல், இன, மதப் பிரச்சினைகளினால் நடைபெறும்
(4ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

"தொலைவில் இருக்கும் வசதிக்காக அருகிலிருக்கும் கடமையை நீ புறக்கணிக்கக் கூடாது."

- மகாத்மா காந்தி

# ★ மட்டக்களப்பில் ராணுவ கெடுபிடியால் 65 வீத விவசாய நிலங்கள் கைவிடப்பட்ட நிலையிலுள்ளன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இராணுவத்தினரின் வன்முறை நடவடிக்கைகளால் நெல்வயல் மிக்க 65 வீதமான நிலப்பரப்பில் விவசாயம் கைவிடப்பட்டுள்ளது. தமிழீழத்தில் மட்டுமல்ல இலங்கையிலேயே நெல்விளைச்சல் கூடிய பிரதேசம் மட்டக்களப்பு மாவட்டமாகும்.

கடந்தகால வன்செயல்களால் நெற்செய்கை பாதிக்கப்பட்ட நிலையில் நெல்வயல்கள் முட்செடிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதுதவிர மட்டக்களப்பில் 25,568 தமிழ் இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி உள்ளனர். 15,000 சிறுவர்கள் அநாதைகளாகியுள்ளனர்.

இதேவேளை மட்டு. அம்பாறை மாவட்டங்களில் பலாத்காரமாக மீள்குடியமர்த்தும் வேலைகளை அகதிமுகாமில் வாழ்வோர் கடுமையாக எதிர்த்துள்ளனர். அம்பாறை, காரைதீவு அகதி முகாமில் வாழும் தமிழர்கள் அங்கு விஜயம் செய்த ஐ.நா செயலரின் பிரதிநிதி கலாநிதி பிரான்சிஸ் டெங்கிடம் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். தமது கிராமத்தில் பலர் வெட்டிக் கொல்லப்பட்டதாகவும் அப்படிப்பட்ட இடத்தில் எப்படி நாம் சென்று குடியேறுவது எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (இ)

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்படவுள்ள வதிவிட வேளாண்மைப்போட்டிக்கான விண்ணப்ப முடிவுதிகதி எதிர்வரும் 10ம்-திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நமது நோக்கு

### குண்டுவீச்சு - பழிவாங்கலா?

"போருக்கு நேரடியாக முகம் கொடுக்க முடியாத சிறீலங்கா அரசு அப்பாவி மக்கள்மீதும் புனித வணக்க ஸ்தலங்கள்மீதும் தனது காட்டுமிராண்டித்தனத்தைக் கொடூரமாகக் காட்டியுள்ளது!" - என யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க ஒரு முதல்வர் அருட்திரு இம்மானுவல் அடிகளார் தெரிவித்துள்ளார்.

தேவாலயம்மீது அண்மையில் நடாத்திய குண்டு வீச்சைக் கண்டித்து மௌன ஊர்வலம் நடாத்தப்பட்டது ஜனநாயக வழியில், அகிம்சை வழியில், எதுவித ஆர்ப்பாட்டமுமின்றிப் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தமது எதிர்ப்பை அரசுக்குத் தெரிவித்துள்ளார்கள்.

இதற்கான அரசின் பதில் இதுதானா? தேவாலயங்களுக்கு நடுவில், மக்கள் குடியிருப்புப் பகுதியில் நடாத்தப்பட்ட குண்டுவீச்சின் செய்தி என்ன?

நாமே ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையிழந்து அரச பயங்கரவாதப் போர் நடாத்தும்போது, உங்களுக்கேன் ஜனநாயகம், மௌன ஊர்வலம் என்ற போதனையா நடக்கிறது?

யாழ். அரச அதிபர் கொழும்பிலே பிரதமரைச் சந்தித்து, யாழ். குடாநாட்டில் மருத்துவமனைகள், சர்ச்சுகள், தேவாலயங்கள் ஆகியவற்றின் மீது நடந்த மிலேச்சத்தனமான குண்டுவீச்சுகள் பற்றி முறையிட்டார்.

இதுபற்றிக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதமர் உறுதி அளித்தார்.

இராணுவத்தினர் பிரதமருக்கு விடுத்த சவாலா இந்தக் குண்டுவீச்சு?

ஜனநாயக வழியில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வியடைந்திருப்பதை அடுத்து, வேறு வழியின்றி அரசு போரிட்டு வருகின்றது. "புலிகளுடன் சமரசப் பேச்சு இல்லை!" - எனப் பிரதமர் 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகைப் பேட்டியில் கூறியிருந்தார்.

ஜனநாயக வழியில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைக்கு இந்தக் குண்டுவீச்சே நல்ல உதாரணம். பாவம், பிரதமர் ஏதோ கூற, இராணுவம் வேறேதோ செய்து கொண்டிருக்கிறது!

க. பொ. த. (சா/த) பரீட்சைக் காலத்தில் குண்டுவீச்சை நிறுத்தும்படி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் விடுத்த கோரிக்கைக்கு, குருநகர் குண்டுவீச்சு நல்ல பதிலைக் கொடுத்திருக்கிறது.

பௌத்த பேரினவாதம் ஏனைய மதத்தினரை அச்சுறுத்த இராணுவத்தைப் பயன்படுத்துகிறதா?

அரச படையினரின் மிகக் கீழ்த்தரமான காடைத்தனம் எனக் கத்தோலிக்க ஒரு முதல்வர் கூறியது இதனைக்குறித்தே!

# பாபர்மசூதி இருந்த இடத்தில் ராமர் கோயில் கட்ட முயற்சி

(புதுடில்லி)

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமர் ஆலயம் கட்டி எழுப்பும் முயற்சிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆலயம் கட்டுமானப் பணிக்காக ராஜஸ்தான் மாநிலத்திலிருந்து சுமார் 40 பிரபல சிற்பிகள் அயோத்தி நகருக்கு அழைத்துவரப்பட்டுள்ளனராம்.

எனினும் அயோத்தியில் மசூதி இருந்த இடத்தில் ராமர் ஆலயம் கட்ட அனுமதிக்கப்படாதென உத்தரப் பிரதேசத்தில் புதிய முதல்வர் திரு முலாயம்சிங் யாதவ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இங்கு இடம்பெற்ற சட்டசபைத் தேர்தலில் முலாயம்சிங் யாதவின் கட்சிக்கு முஸ்லிம்கள் பெருமளவில் ஆதரவளித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. —இ

## பஸ் விபத்தில் 37 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் நேற்று முன்தினம் பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று பாலத்தைக் கடக்க முற்பட்டபோது கால்வாய் ஒன்றுக்குள் பாய்ந்ததில் அதிலிருந்த 37பேர் பேர் உயிரிழந்தனர்.

15 பேர் வரையில் உயிருடன் மீட்கப்பட்டதாகவும் உயிர் தப்பியோரை மீட்கும்பணிகள் தொடர்ந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஏ-பி

## இராசி பலன்

07-12-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 23)

நவமி பி. இ. 3-53வரை; உத்தரம் பி. இ. 4-07 வரை அமிர்தசித்தம் சுபநேரம் காலை 10-47முதல் 12-17வரை இராகு காலம் காலை 3-07 முதல் 4-47 வரை.

மேஷம்: பரபரப்பூட்டும் செய்தி, தனலாபம் காரிய சித்தி.

இடபம்: பெண்கள் வகை தொல்லை, வயிற்றுக்கோளாறு, அசதி.

மிதுனம்: நிதானமற்ற செயல், பிறர்தொல்லை அலைச்சல்.

கடகம்: உறவினர் சகாயம் பணவரவு, தெய்வபக்தி.

சிங்கம்: தொழில் நஷ்டம், மனப்போராட்டம் வெறுப்பு.

கன்னி: பந்துவருகை, புதிய ஸ்தானம், கடினஉழைப்பு

துலாம்: வீண் அலைச்சல் பணவிரயம், உபவாசம்.

விருச்சிகம்: மனக்களிப்பு, அதிகாரிகள் பாராட்டுபவனம்

தனுசு: தாயார் நினைவு, வெளியூர் தகவல் புத்தி மேன்மை.

மகரம்: தொழில் நஷ்டம், பணமுடை, மனக்கிலேசம்.

கும்பம்: துயரமான சம்பவம், அமைதியற்றபோக்கு

மீனம்: ஆடம்பர பிகவம், கடினஉழைப்பு, மனநிறைவு.

—ஜோஸ்யர்.

# பூநகரி தாக்குதல் அரசு தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)

பூநகரி இராணுவ கூட்டுத்தளம் மீது விடுதலைப் புலிகள் கடந்தமாதம் மேற்கொண்ட 'தவளை' தாக்குதல் நடவடிக்கைகள் பற்றிய விபரங்களை அறிவதில் அரசு தீவிர ஆர்வம் காட்டி வருவதாக தெரியவருகிறது.

இதற்கென இத்தாக்குதல் நடவடிக்கையின்போது காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் இராணுவச் சிப்பாய்கள் துருவித்துருவி விசாரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன நியமித்த விசாரணைக்குழுவே இத்தகைய விசாரணைகளை மேற்கொண்டு வருகிறதாம். (ஏ-பி)

# தென்னை உரம் விநியோகிக்கப்படுகிறது

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில் தென்னை மரங்களுக்கான காய் உரம் ஏ. பி. எம். தற்போது கமநலசேவை நிலையங்களில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

50 கிலோ கிராம் காய் உரம் 592 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் 12 ரூபாவாகவும் விநியோகிக்கப்படுகிறது.

காய்க்கும் தென்னை மரங்களுக்கு உரமிடுவதற்கு இதுவே ஏற்றகாலம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (154-சி)

# பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் தேவை

(கொழும்பு)

நாட்டில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஒருவரை நியமிப்பதே பலமான பாதுகாப்புப் படையை உருவாக்குவதற்கான முதல் நடவடிக்கை என பல இராணுவ அதிகாரிகளும், ஆய்வாளர்களும் கூறியுள்ளனர்.

ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சர் பதவியை வைத்திருப்பது வழக்கம். விஜயதுங்கா தலைமைப் பதவியை ஏற்று ஆறு மாதங்களாகியும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் நியமிக்கப்படவில்லை.

சிக்கல்கள் மலிந்த அரசியல் ரீதியில் ஆபத்தாக இருக்கக்கூடிய பதவி இது. இப்பதவிக்கு போட்டா போட்டி இல்லாது இருப்பதற்கான முக்கிய காரணங்களுள் இதுவும் ஒன்று என பி. பி. சி. தெரிவித்தது. —இ

# காசநோய் விடுதி கோப்பாயில் இயங்குகிறது

(கொழும்புத்துறை)

மயிலிட்டிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து சங்கானை வைத்தியசாலையில் இயங்கிவந்த மயிலிட்டி அரசினர் காசநோய் விடுதி சிகிச்சைப்பிரிவு தற்போது கோப்பாய் அரசினர் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

சங்கானை வைத்தியசாலையில் போதிய இடவசதி இன்றி பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கிவந்த மேற்படி சிகிச்சைப்பிரிவு, பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவு பணிப்பாளரின் உத்தரவுக்கமைய கடந்தமாத நடுப்பகுதியிலிருந்து கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் இயங்கிவருகிறது. (159)

# களை கொல்லிகளுக்கு பெரும் தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

விவசாயிகள், நெற்பயிர்கள் ஊடாக வளரும் களைகளைக் கட்டுப்படுத்த பயன்படும் 3, 4 டி. பி. ஏ., எம். சி. பீ. போன்ற களை கொல்லிகளுக்கு யாழ். குடாநாட்டில் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 3, 4 டி. பி. ஏ. களை கொல்லி நெற்பயிர் முளைத்து 14 முதல் 21 நாள் வரை வளரும் நெற்சப்பி, கோழிச்சூடன் போன்ற களைகளை கட்டுப்படுத்த பயன்தரும்.

ஆனால் இதனைப் பாவிக்க வேண்டிய காலஎல்லை தற்போது முடிவடைந்துவிட்டதால் 21 முதல் 28 நாட்களுக்குள் இடைச்சி, கோரை போன்ற அகன்ற இலைக் களைகளை கட்டுப்படுத்தப் பாவிக்கப்படும் களைக் கொல்லியான எம். சி. பீ. கிளிநொச்சியில் இருந்து தருவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட விரிவாக்கல் உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எ. சிவலோகநாதன் தெரிவித்துள்ளார். —154-சி

# அச்ச நிலையில் வடபகுதி படையினர்

(கொழும்பு)

வடபகுதிமுகாம்களில் உள்ள படையினர் புலிகளின் தாக்குதல்களால் பெரும் அச்சநிலையிலேயே உள்ளனராம்.

அண்மையில் வழக்கு ஒன்றிற்காக கொழும்பு நீதிமன்றத்தில் சாட்சியமளித்த பலாலி இராணுவ முகாம் சிப்பாய் கூறியகூற்று படையினரின் மனோநிலையையும் விரக்திநிலையையும் காட்டுவதாக உள்ளது.

விஜயக்கோன் முதியான்சே பண்டார உடுகமஎன்ற அந்த சிப்பாய் வழக்கு விசாரணையின் போது, பலாலி இராணுவ முகாமிலிருந்து இன்று காலை இந்த நீதிமன்றத்துக்கு வந்தேன் நான் அந்த முகாமில் சிப்பாயாக கடமையாற்றுகிறேன், எனது பக்கம் சாட்சியளிக்கவுள்ள இராணுவத்தினரும் பலாலியில் தான் கடமையாற்றுகிறார்கள். நாங்கள் உயிருடன் இருந்தால்தான் அடுத்த தவணை வழக்கு விசாரணைக்கு வருவோம் எனக் கூறியுள்ளார். (இ)

**வீதியோரம் மரம் நடுவோம்**
**விழிபோலக் காத்திடுவோம்**

# மலையகத் தமிழர் அனைவருக்கும் அடையாள அட்டை விநியோகம்

(கொழும்பு)

மலையகத் தோட்டத்தொழிலாளர்கள் அனைவருக்கும் உடனடியாக அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார்.

வெளியிடங்களிலிருந்து மலையகப் பகுதிகளுக்கு ஊர்வலம் செய்வோரிடமிருந்து மலையகத்தவரை பிரித்து இனம் காண்பதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இதற்கு முன்னோடி நடவடிக்கையாக கண்டிச்சேரியில் ஆட்பதிவு ஆணையாளரின் அலுவலகம் விரைவில் திறக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மலையகத்தவருக்கு உடனடியாக தேசிய அடையாள அட்டை வழங்கப்படவேண்டுமென அமைச்சர் தொண்டமான் அரசை வற்புறுத்தி வந்ததும் தெரிந்ததே. (ஈ-இ)

## சூறாவளி 61 பேர் பலி!

(சென்னை)

தமிழகத்தில் அண்மையில் ஏற்பட்ட சூறாவளியினால் மரணித்தோரின் எண்ணிக்கை 61 ஆக அதிகரித்துள்ளது.

இச்சூறாவளி அனர்த்தத்தை அடுத்து ஒரு கிராமத்தைச் சேர்ந்த 500 பேர் மீட்கப்பட முடியாத நிலையில் சிக்குண்டு இருப்பதாகவும் தெரிய வருகிறது. (ஈ-இ-வி)

## ஜி. சீ. ஈ. பரீட்சை நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

நாடு முழுவதும் நேற்று ஆரம்பமான க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் 5 லட்சத்து 38 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றியுள்ளார்கள்.

3698 பரீட்சை நிலையங்களில் மேற்படி பரீட்சை நடைபெறுவதாக பரீட்சை திணைக்களம் அறிவித்தது. (வி-இ)

# கடற்புலிகள் முகாம் அழிக்கப்பட்டதாம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் உள்ள கடற்புலிகளின் கப்பல் படை முகாமை தாம் விமானக் குண்டுவீச்சினால் அழித்து விட்டதாக இராணுவ வட்டாரங்கள் நேற்று அறிவித்ததாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இக்குண்டு வீச்சில் எவ்வளவு உயிர்சேதம் ஏற்பட்டுள்ளது என்ற விபரம் தமக்கு இன்னும் கிடைக்கவில்லையென்று கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளதாகவும் வெரித்தாஸ் தெரிவித்தது. வி-இ

### யாழ். நகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் திருமதி திலகநாயகம் போல் பத்தினியம்மா கொழும்பிலுள்ள யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு தகவல் அனுப்பி வைத்துள்ளார்.

மக்கள் நெருங்கிவாழும் பகுதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட இக்குண்டுவீச்சினால் ஏற்பட்ட உயிரிழப்பு குறித்தும், கட்டிடங்கள், வீடுகளுக்கு ஏற்பட்ட சேதம் குறித்தும் அறிவிக்கப்பட்டுள்ளது. —158-இ

### உள்நாட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டு யுத்தங்களினால், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பலியாகிவிட்டனர். பெருமளவினர் அகதிகளாகியுமுள்ளார்கள்.

1989ம் ஆண்டுக்கும் 1994ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட 6 வருடகால எல்லைக்குள் 85 வீத உணவுப் பொருட்களை அகதிகளுக்கு உலகம் முழுவதிலும் வழங்கியுள்ளோம். இவ்வருடம் மட்டும், 22 லட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை வழங்கியுள்ளோம் என்று உலக உணவு ஸ்தாபனம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. வி-இ

### பல்கலைக்கழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வது.

முறையீடுகள் இருப்பின் மாணவர்கள் இக்குழுவிற்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கலாம். பல்வேறு கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் பட்டியலும் ஆகக்குறைந்த புள்ளிகளின் பட்டியலும் நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்திலும் இப்பட்டியல் உள்ளது. மேன்முறையீடு செய்வதற்கு தகுதியான காரணங்கள் பின்வருமாறு அமைந்திருக்கவேண்டும். ஆகக் குறைந்த புள்ளிகளை உடைய ஆனால் எந்தவொரு கற்கை நெறிக்கு தகுதியுடையவர் என கருதும் பட்சத்தில் முறையீடு செய்யலாம்.

மற்றொரு கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதும் மாணவர்கள் தெரிவு செய்யப்படவேண்டிய கற்கை நெறியை குறிப்பிட்டு மேன்முறையீடு செய்யலாம்.

சில கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் யாராவது தகுதியில்லை எனக் கருதப்பட்டால் தகுந்த காரணங்களை சமர்ப்பித்து முறையீடு செய்யலாம்.

முறையீடுகளை செயலாளர், பல்கலைக்கழக அனுமதி தொடர்பான மேன்முறையீட்டு விசாரணைக்குழு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மே/பா. இல - 20, வாட் பிளேஸ், கொழும்பு - 7. (இ-இ)

# இந்தியாவில் பல இடங்களில் குண்டு வெடிப்பு; ஒருவர் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் பல்வேறு இடங்களில் 5 ரயில் வண்டிகளில் நேற்று ஏற்பட்ட தொடர் குண்டு வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 16 பேர் காயமடைந்துள்ளனர்.

அயோத்தி பாபர் மசூதி விவகாரத்தில் ஒருவருட நினைவு தினத்தை நினைவுகூருதும் அயோத்தி பாபர் மசூதியில் இராமர் கோயில் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதை எதிர்க்கும் முஸ்லிம் தீவிரவாதக் குழுவினரே இக்குண்டு வெடிப்பின் பின்னணியில் உள்ளதாக புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்துள்ளன. (ஈ-இ)

### பூநகரி அழிவுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிவாகா நேசஸ் இலங்கை பற்றிய தனது நேற்றைய செய்திக் கண்ணோட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இது குறித்து தெரிவிக்கையில்: விமானப் படையினர் வடபகுதி மீது கடந்த நான்கு வாரங்களாக நடாத்திவரும் தாக்குதலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு வணக்க ஸ்தலம், மருந்தகம் மனைகள் பலவும் தாக்கப்பட்டுள்ளன.

மேலும் வடபகுதியில் அரச செயலகம், வணக்க ஸ்தலம், இரு மருத்துவமனைகள் விமானத் தாக்குதலுக்குள்ளானது. பாதுகாப்புப்படையினர் அப்பாவி மக்களுக்கு தீங்கிழைக்கும் ஒரு முறையான முயற்சியில் இறங்கியுள்ளமையையே எடுத்துக் காட்டுவதாகவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (ஈ-இ)

### புலிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய நவீன ஆயுதங்களைக் கொண்டு, சீனன்குடா விமான நிலையத்தையும், பலாலி விமான நிலையத்தையும் விடுதலைப் புலிகள் தாக்க கூடுமென இராணுவம் அஞ்சுகின்றது.

ஏற்கனவே விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களினால் பலாலி விமான நிலையம் ஓரளவு சேதமடைந்துள்ளது.

அத்துடன் மட்டுநகர், அம்பாறை ஆகிய இடங்களில் உள்ள விமான நிலையங்களில் யுத்த விமானங்களை நிறுத்தக்கூடாதென்று பாதுகாப்பு அமைச்சு முன்பே உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களிலிருந்து போர் விமானங்களைப் பாதுகாப்பதில் அரசுக்கு இப்போது பெரும் தலையிடி ஏற்பட்டுள்ளது.

இதனால் இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு முக்கிய உறுதுணையாக இருந்துவரும் விமானத் தாக்குதல்களுக்கு பெரும் பின்னடைவுகள் வருங்காலத்தில் ஏற்படலாமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (வி-இ)

### கிளிநொச்சியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யைச் சுற்றி வட்டமிட்ட இரு புக்காரா விமானங்கள் திடீரெனப் பல தடவை அடுத்தடுத்து குண்டுத் தாக்குதலை நடத்தின.

இத்தாக்குதலினால் குடிசை ஒன்றின் முன்னால் விளையாடிக் கொண்டிருந்த கிரிஷாந் (5 வயது) என்ற சிறுவனும், அவனது தாயாரும் படுகாயமடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். மேலும் மூவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி விவசாயப் பீடத்திலிருந்து 300 மீற்றர் தொலைவில் நடத்தப்பட்ட இத்தாக்குதலை அடுத்து விவசாயப் பீடத்தைச் சேர்ந்த பலரும் சிதறி ஓடினர்.

இதனையடுத்து நேற்றுக்காலை விவசாய பீடத்தில் நடைபெற இருந்த உயிரியல், விலங்கியல் பாடங்களுக்கான பரீட்சைகள் நேற்று மாலை வரை ஒத்திவைக்கப்பட்டதாக கிளிநொச்சி விவசாயப் பீடாதிபதி அறிவித்துள்ளார்.

மேலும் விமானத் தாக்குதல் நடைபெற்ற வேளையில் அருகிலுள்ள பாடசாலை ஒன்றில் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த பரீட்சார்த்திகள் சிதறி ஓடியதாகவும், இதனால் பரீட்சை நடத்துவதில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கிளிநொச்சி வைத்தியசாலை ஊழியர்களும் குண்டுவீச்சை அடுத்துச் சிதறி ஓடினர்.

இதேவேளையில் வட்டக்கச்சி, விசுவமடுப் பகுதியில் நடத்தப்பட்ட புக்காரா தாக்குதலிலும் பல மரங்கள் முறிந்ததுடன், கால்நடைகள் பலவும் இறந்தன. ஈ-இ

### திருமலைப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மீன்பிடிக்க சென்ற இம்மீனவர்கள் நீண்டநேரமாகியும் திரும்பி வராததையடுத்து உறவினர்கள் பலத்த தேடுதல் மேற்கொண்டனர்.

ஆயினும் அவர்களது தேடுதல் முயற்சி வெற்றியளிக்கவில்லையென்று தெரியவருகிறது. (ஈ)

### விமானத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள், மற்றும் வழிபாட்டு ஸ்தலங்கள் மீது நீண்டகாலமாகத் தொடர்ந்து நடாத்தப்படும் விமானக்குண்டு வீச்சுகளையும், ஷெல் தாக்குதல்களையும் கண்டித்து பல தடவைகள் இலங்கை ஜனாதிபதிக்கும், இராணுவ அதிகாரிகளுக்கும் நேரடியாகவும் மகஜர்கள் மூலமும் தெரிவித்திருந்தும் இதுவரை எந்த ஒரு பலனும் கிடைக்கவில்லை.

அதற்கு எதிர் மாறாகவே அரசின் செயல்பாடுகள் தற்போது அமைந்து விட்டன. எனவே இனிமேலும் தொடர்ந்து எமது கண்டனங்களை அரசுக்குத் தெரியப்படுத்துவதில் எந்த ஒரு பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை.

இலங்கையில் சகல மதங்களும் பேணிப்பாதுகாக்கப்படுவதாக கூறிவரும் இலங்கை அரசு யாழ் மாவட்டத்தில் கத்தோலிக்க தேவாலயங்கள் மீதும் கத்தோலிக்க மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகள் மீதும் தொடர்ச்சியான விமானத்தாக்குதல்களையும் ஷெல் தாக்குதல்களையும் நடாத்தி வருகின்றது.

இதனால் அப்பாவிப்பொதுமக்கள் அதிகளவில் பலியாகின்றார்கள். தேவாலயங்களும் மற்றும் வழிபாட்டுஸ்தலங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்கம் திட்டமிட்டு செய்யும் இந்த செயலை கண்டித்து அந்த அரசிடமே முறையிடுவது பிரயோசனமற்ற ஒரு செயலாகவே தற்போது தெரிகிறது. இந்த கொடூரங்களை கொழும்பிலுள்ள எமது நண்பர்களுக்கும் பல தடவைகள் தெரிவித்தும் அவர்களும் மௌனம்சாதித்து வருகின்றார்கள்.

ஆகவே தற்போது கத்தோலிக்க மக்கள்மீது நடாத்தப்பட்டுவரும் படுகொலைகளை சுட்டிக்காட்டி கத்தோலிக்கத் தலைமைப்பீடமான வத்திக்கானுக்கு நேரடியாகவே முறையீடு செய்யப் போவதாகவும் இதனால் ஏதாவது ஒரு மாற்றம் ஏற்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கப் போவதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (வி-இ)

## போர் இல்லாதிருந்தால் வேலையற்றோர் தொகை 8 சதவீதமாக குறைந்திருக்கும்

— ரணில்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு யுத்தம் இல்லாவிட்டால் நாட்டில் வேலையற்றோர் தொகை எட்டு சதவீதமாக குறைந்திருக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஆடை தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றின் திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

1977 இல் 25 வீதமாக இருந்த வேலையற்றோர் தொகை தற்போது 12 வீதமாக குறைந்துள்ளதாகவும் தெரிவித்தார். (ஈ-இ)

## போதிய மருந்து வகைகள் வடக்கு - கிழக்கிற்கு அனுப்பிவைப்பு

சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளுக்கு போதிய மருந்து வகைகளும், மருத்துவ உபகரணங்களும் அனுப்பிவைக்கப்படுவதாக சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொண்டர் ஸ்தாபனங்களின் ஒத்துழைப்புடன் நோய்த்தடுப்பு சுகாதார பராமரிப்பு திட்டங்களும் அங்கு மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஈ-சி)

## பிலிப்பைன்ஸில் புயல் 40 பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸின் மணிலா தலைநகரை அண்டிய பகுதிகளில் 320 கிலோ மீட்டர் வேகத்தில் தற்போது கடும் புயல் காற்று வீசுவதாகவும் இதுவரை இதில் 40 பேர் உயிரிழந்து விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்புயல் காற்றினால் மணிலா விமான நிலையமும், பாடசாலைகளும் மூடப்பட்டு விட்டன. சுமார் 50 ஆயிரம் பேர் அகதிகளாகிவிட்டதாகவும் இந்த புயல் காற்று மற்றைய இடங்களுக்கும் பரவக் கூடிய அறிகுறிகள் தென்படுவதாக செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (வி-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1998-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under licence Number B/10 336/Bi